32

விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்குஊழியர்கள் தேவை
விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.

மலர் 9 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 102) 1972 ஜுலை - ஆகஸ்ட் | இதழ் 10 - 11

# வினோபாஜீயுடன் பேட்டி

வடஇந்தியாவிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் நகோதார் என்ற இடத்தில் நடைபெற்ற 23 ஆவது அகில இந்திய சர்வோதய சம்மேளனத்தில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திரு. சி. க. வேலாயுதபிள்ளை இலங்கை திரும்பும் வழியில் சர்வோதய இயக்கத்தின் தந்தை ஆசார்ய வினோபா அடிகளைத் தரிசிப்பதற்காக வர்தா சென்று அங்குள்ள பரந்தாம் ஆசிரமத்தில் தங்கியிருக்கும் வினோபா அடிகளைப் பேட்டி கண்ட விபரத்தை மகிழ்ச்சியுடன் தருகிறோம்.

**வினோபாஜீ:** ஜெய் ஸ்ரீ லங்கா; ஸ்ரீலங்காவின் பிரதமர்ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு எனது வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவியுங்கள்.

**சி. க. வே:** தெரிவிக்கிறேன்.

**வினோபாஜீ:** இங்குள்ள சர்வோதய மகா நாட்டுக்கு எத்தனை முறை வந்திருக்கிறீர்கள்?

**சி. க. வே:** பாரதத்திற்கு 23 ஆவது தடவையாக வந்துள்ளோம். சேவாபுரி, காஞ்சீபுரம், காலடி ராஜ்கீர், நகோதார் ஆகிய இடங்களில் நடை பெற்ற சர்வோதய மகாநாடுகளில் கலந்து கொண்டோம்.

**வினோபாஜீ:** இப்போது என்ன பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள்?

**சி. க. வே:** காந்தி நூற்றாண்டு ஞாபக வேலைத்திட்டமாக அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் மூன்று முக்கியத் திட்டங்களைமேற்கொண்டுள்ளது.

(1) கொழும்பில் சர்வோதய நிகேதனம் என்ற பெயரில், விமான நிலையத்துக்கருகாமையில் ஒர் ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சம்பத்துத்தானம், சிரமதானம் ஆகியவைகளின் உதவி கொண்டு ரூபா 15, 000 பெறுமதியான மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது. இங்குமாணவர் பயிற்சி பெறுகிறார்கள். சர்வோதய பாத்திர இயக்கம் ஆரம்பிக்கப் பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இங்குசர்வோதயஅச்சகம்உள்ளது. 'காந்தீயம்' என்ற தமிழ் மாத வெளியீடும் 'சாந்தி மார்க்கய' என்னும் சிங்கள வெளியீடும் பிரசுரமாகின்றன. இங்கு உத்தியோகத்தர், ஆசிரியர், இளைஞர் ஓய்வு நேரங்களில் சர்வோதய பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

(2) கிளிநொச்சி-அக்கராயன் குளம் என்னும் பகுதியில் காந்திக்கிராமம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் 300 ஏக்கர் நிலம் உதவியுள்ளது. 40 ஏக்கர் நிலம் பண்படுத்தப் பட்டுள்ளது. ரூபா 7,500 செலவில் பெரிய கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இளைஞருக்கு சர்வோதயப் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

(3) பரந்தன் - முல்லைத்தீவு வீதியிலுள்ள தர்மபுரம் என்னும்கிராமத்தில் அரசாங்கம் உதவிய 25 ஏக்கர் நிலத்தில் கஸ்தூரிபாய் இல்லம் அமைப்பதற்கான திட்டம் உருவாகி வருகிறது.

இம் மூன்று திட்டங்களுக்கும் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயன் அவர்கள் அடிக் கல் நாட்டினார்கள்.

(4) கிளிநொச்சி-உருத்திரபுரம்கிராமத்தில்ஸ்ரீ அரியநாயகம் அவர்கள் 'காந்தி நிலையம்' மாணவர் இல்லத்திற்குஅடிக்கல் நாட்டினார்கள். கடந்த 15 ஆண்டுகளாக காந்தி நிலையம் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

**வினோபா:** அச்சா! இந்த வேலைகள் வளர்ந்து வெற்றியடைய வேண்டுமென்ற மனப் பூர்வமான நல்வாழ்த்துக்களை சங்கத்திற்குத் தெரிவியுங்கள். நீங்கள் இங்கு தங்கி நாளைக்குச் செல்லுங்கள்.

[பி. ப. 2 மணிக்கு மீண்டும் பேட்டி]

**சி. க. வே.** இலங்கையிலிருந்துஅழைப்புவந்தால் பாபா மறுக்காமல் வர வேண்டும்.

(மூன்றாம் பக்கம் பார்க்கவும்)

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 102
1972 ஜுலை, ஆகஸ்டு

## சட்டமும் சமுதாயமும்

சட்டங்களினுல் மாத்திரம் சமுதாயத்தைப் பண்படுத்தலாம் என்று நினைப்பது ஒரு வீண் பகற்கனவு. சட்டங்கள் ஒரு தற்காலிகஏற்பாடேயன்றி ஒரு போதும் நிரந்தரமாக இருக்கத் தகுதியற்றவை.

சிறு பிள்ளைகள் படிக்கும் பாடசாலையில் சில சில சட்டங்கள் உண்டு. அவை பெரியவர்களுக்குத் தேவையற்றவை. சட்டங்களும் சமுதாயம் பண்பட்டு வரத் தேவையற்றவையாக வேண்டும். காலாகாலத்தில்தேவையற்றவையாகி வராதசட்டங்களில் ஏதோ பிழையிருக்க வேண்டும். அதாவது அந்தச் சட்டங்கள் சமுதாயத்தைப் பண்படுத்த உதவவில்லை யென்று கொள்ள வேண்டும். சமுதாயத்தைப் பண்படுத்துவதற்குச்சட்டங்கள் உதவ வேண்டுமேயன்றிச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்குச் சட்டங்கள் உதவாது. தற்காலிகமாக மாத்திரம் உதவலாம்.

சமுதாயத்தைப் பண்படுத்துவதற்குச் சட்டங்களிலும் பார்க்க அன்பு சிறந்ததும் நிரந்தர மானதுமாகும். மாசற்ற அன்புணர்ச்சியைச் சமுதாயங்களில் வளர்ப்பது சிறப்புடையதாகும். கீழைத்தேச நாகரீகம் இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. இதே நாகரீகத்திலிருந்து தோன்றியது தான் சர்வோதயம்.

சர்வோதய நாகரீகத்தை அகில உலகிலும் பரப்பினுல் இன்றுள்ள பூதாகரமான பெரிய பிரச்சினைகள் எல்லாம் தானே மறைந்து விடும். இன்று தேசங்களுக்குள் இருக்கும் முரண்பாடுகளைப் பார்க்கும் பொழுது, தூரத்தில் அடிவானத்தின் விளிம்பில் தோன்றும் விடிவெள்ளிபோன்று சர்வோதயம் தோன்றுகின்றது. வேறு ஒரு மார்க்கமும் தோன்றவில்லை.

சர்வோதயம் உலகம் முழுவதும் பரம்பினுல் சில சமயம் இந்த உலகம் உய்யக் கூடும். வேறு எதனுலும் உய்யக் கூடிய அறிகுறிகள் இன்று தெரியவில்லை.

'கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்' என்று மாணிக்கவாசகர் கூறினர். இக்காலக்கல்வி, மனித சமுதாயத்தை எதிர்ப்பக்கத்திற்கு- அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லுகின்றது. மனித சமுதாயத்தைத் திசை திரும்ப விடாமல் தடுக்கக் கூடியது சர்வோதயம் ஒன்று தான். சமயங்கள் வலு விழந்து வருகின்றன. இதை முன்னரே உணர்ந்துதான், மாணிக்கவாசகர் 'பிழைத்தும்' என்று கூறினர். சமயங்களின் இடத்தைச் சர்வோதயம் ஒன்றினுற்றுன் நிரப்ப முடியும். கல்விமான்கள் சிந்திப்பார்களாக.

க. சி.

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக்கிளை சர்வோதயநிகேதனம் (1972யூன்) வரவுசெலவுவிபரம்

வரவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 115 | 06 |
| சர்வோதயபாத்திரம் | 13 | 38 |
| சம்பத்துத்தானம் | 163 | 22 |
| அரிசி | 164 | 45 |
| விடுதிக்கட்டணம் | 55 | 00 |
| கமம் | 9 | 70 |
| மொத்தம் | 520 | 81 |

செலவு

| | | |
|---|---|---|
| உணவு | 136 | 48 |
| பிரயாணம் | 14 | 55 |
| சலூன் | 1 | 00 |
| வெளிச்சம் | 2 | 35 |
| மாணவர் செலவு | 15 | 30 |
| கமம் | 32 | 05 |
| தபால் | 2 | 00 |
| வயித்தியம் | 1 | 13 |
| அச்சகம் | | :0 |
| எழுத்து உபகரணம் | 1 | 30 |
| உபகரணம் | 1 | 50 |
| காந்தீயம் | 30 | 00 |
| கையிருப்பு | 282 | 85 |
| மொத்தம் | 520 | 81 |

## சர்வோதய கருத்தரங்கம்

27 8 72 ஞாயிறு மு ப 10மணியளவில் அட்டன், தொழிலாளர்தேசியசங்க மத்தியஅலுவலகத்தில் திரு. த. ஜயாத்துரை அவர்களின் தலைமையில் சர்வோதய கருத்தரங்கம் நடைபெற்றது. மலைநாட்டின் பலபகுதிகளிலிருந்து ஐம்பதுபிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் திருவாளர்கள் சி.க. வேலாயுதபிள்ளை ஸி.வி.வேலுப்பிள்ளை, எஸ். பெருமாள், எம்.கே. கணபதி ஆகியோர் கருத்துரைவழங்கினர்கள். கருத்தரங்க முடிவில் மலையகத்தில் காந்தீய-சர்வோதயதத்துவத்தைப்பரப்புவதற்கான நிர்மாணத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

## வினோபஜீ......

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

வினோபா; (உரத்துச் சிரித்து விட்டு) நான் இலங்கைக்கு வர விரும்பினுலும் நமதுதேகம் மறுத்தால்? இலங்கைப் பிரதமர் சகோதரி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா அவர்களை நான் பார்க்க விரும்புவதாகவும் இங்கு வருமாறும்கூறுங்கள்.

சி. க. வே: தங்கள் விருப்பத்தைஎங்கள் பிரதமருக்குத் தெரிவிக்கிறோம்.

[மறு நாள் காலை 6 45 மணிக்கு மீண்டும் பேட்டி]

வினோபாஜீ; தோத்திரம் பாடுங்கள்

சி. க. வே: நத்தார்படைஞானன்பசு... [முழுத் தேவாரத்தையும் பாடினுர்]

வினோபாஜீ: இது யார் பாடியது.

சி. க. வே: நால்வர் பெருமக்களில் ஒருவராகிய சுந்தர மூர்த்தி நாயனுர் இலங்கையில் உள்ள திருக்கேதீச்சரம் சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான் மீது பாடிய தேவாரம்.

வினோபாஜீ; சுந்தரமூர்த்திநாயனுர் இலங்கைக்கு வந்துபாடினுரா?

சி. க. வே: நமக்கு இதை அறிந்து உணர்த்தும் ஆற்றல்இல்லை. இலங்கையில் இரண்டு பாடல் பெற்ற தலங்கள் உண்டு. இவை திருக்கேதீச்சரம் திருக்கோணேஸ்வரம் என்றழைக்கப்படுகின்றன. இந்த பாகங்களில் எழுந்தருளியிருக்கும் கோவில்கள்மீதுதிருஞானசம்பந்த மூர்த்தி நாயனுரும் சுந்தரமூர்த்தி நாயனுரும் பாடியிருக்கிறுர்கள்.

வினோபாஜீ; திருவாசகம் படியுங்கள்

சி. க. வே. பாரொடு விண்ணுய்... ... ...

முழுப் படலையும் பாடியபோது இசை) சொற்களின் அமைப்புக்கமைய தமது கைளை ஆட்டி அசைத்துரசித்தார்)

வினோபாஜீ: நான் ஒரு திருவாசகம் பாடுகிறேன்.

(முத்திநெறி அறியாத . . . என்ற திருவாசகத்தை உரத்து, இருகைகளினுலும் தாளம் போட்டு பாடினுர் கள்பாடிய குரலைக் கேட்டு, சிறிதுதூரத்தில் இருந்த அன்பர்கள் வந்து பார்த்தார்கள்.)

வினோபாஜீ சிறிது நேரம் தியானித்த பின் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களிடம் பின் வருமாறு கூறினுர்: மாதந்தோறும் காந்தி சேவா சங்க வேலைகளைப் பற்றிய விபரங்களையும் இடையிடையே புகைப்படங்களையும் அனுப்பிவையுங்கள். சங்கம் மேற்கொண்டுள்ளபணிநாட்டிற்குத் தேவையானது. எனது நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன். இப்பணிகள் வெற்றியடையும். நீங்கள் வாழ்க! காந்தி சேவா சங்கமும் வாழ்க!!

## சர்வோதய நிகேதனமும் அதன் தொண்டும்

நான் காந்தீய சர்வோதயத்தில் ஆசையும் பற்றுமிக்கவள். நான் காந்தீய ஆசிரமத்தை சிரமத்தின் பேரில் மலையகத்தில் உருவாக்க வேண்டும் என்ற அவாக் கொண்டு கனவுகண்டு கொண்டிருந்தேன். ஆனுல் எதிர்பாராத விதமாக இன்று சர்வோதய நிகேதனம் வந்தேன். இங்கேதான் கண்டேன் உண்மையான காந்தீய சர்வோதய ஆசிரமத்தை; காந்தி கண்ட ஆசிரமக்குழந்தைகள் சமைத்த உணவையும் உண்டேன். காந்தீய சர்வோதயப் பேச்சுக்களையும் கருத்தரங்கையும் கண்டேன். அவ்வகையில் மன நிறைவும் மகிழ்ச்சியும் அமைதியும் கண்டேன். ஆசிரமம் வளர்ந்தோங்கி மக்கட் பணிபுரிய இறைவன் கருணையை நாடுகிறேன்.

காந்தீய, சர்வோதயஊழியை,
சிவபாக்கியம் குமாரவேல்
ம. த. க. தலைவி, கண்டி

● ● ●

சர்வோதய நிகேதனைப் பார்க்கும் பேறு கிடைத்தது. மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கும் இவ் இல்லத்திற்கு நாம் எவ்வளவோ சேவைசெய்ய இருக்கிறது. இவ்வில்லத்தின் முன்னேற்றத்திற்கு இறைவனின் ஆசிக்கு பிரார்த்திப்போமாக

சரஸ்வதி தேவி கணேஸ்வரன்
காரியதரிசி
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாசமிதி

● ● ●

இன்று சர்வோதய நிகேதனைத் தரிசிக்க மாலை 7மணி வரையில் வந்து சேர்ந்தேன். நிலையத்தில்பயிற்சிபெறும் மாணவர்களும் ஊழியர்களுமாக எட்டுப் பேர்வரையில் இருப்பதை அறிந்தேன். மாணவர்கள் படிப்பிலும் சிலர் இரா சமையல் செய்வதிலும் அமைதியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தமை என்மனதைப்பெரிதும்கவர்ந்தது அமைதியுடன் சர்வோதய வாழ்வை ஏற்றுக் கொண்ட உள்ளப் பாங்கு இங்குள்ளவர்களிடம் மிளிர்வது பாராட்டுதற்குரியது. சர்வோதய பாத்திரங்கள் மூலம் அரிசி சேர்த்து இந்த நிகேதன் நடைபெறுவது இங்கு அறம் வளர்வதற்கு உறுதியாய் அமைந்துள்ளது. இந் நிலையத்தைப் பெறுப்பாக கண்காணிக்கும் அன்பர், திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களின்எண்ணம். உழைப்பு யாவும் ஈந்துவருவது இந்நிலையத்துக்கு கிடைத்த வரப்பிரசாதம். காந்திஅண்ணலின் ஆத்மசக்தி ஆங்காங்கு நின்று அறப்பணிசள் வளர்வதைக் காணும் எடுத்துக்காட்டாக இந்நிலையம் அமைந்துள்ளது. இதன் எதிர்காலம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று பல செயல் வீரர்களை உருவாக்கி காந்தீய இலட்சியங்களுக்கு இருப்பிடமாகத் திகழும் என்பதற்கு ஐயமில்லை. இறைவன் இதனிடன் தொடர்புள்ளயாவர்க்கும் அருள் பாலித்து இன்புற வாழவைக்க வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கிறேன். சாந்தி.

த. நல்லதம்பி
கமத் தொழில் சேவை அலுவலகம்
வவுனியா

# சம்பத்துத் தானம்

இரத்மலானை, சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காகச்சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

வெள்ளவத்தை

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திரு. க. சிற்றம்பலம்<br>அலெக்சாந்திரா ரெரஸ் | 10 | 00 |
| திருமதி. ச. விஜயரத்தினம்<br>அலெக்சாந்திரா வீதி | 120 | 00 |
| திருமதி. கனகராஜா<br>அலெக்சாந்திரா வீதி | 5 | 00 |
| திருமதி. ச. பரமேஸ்வரன்<br>அலெக்சாந்திரா வீதி | 5 | 00 |
| திரு. க. பேரம்பலம்<br>விவேகானந்த வீதி | 2 | 00 |
| திருமதி. சுந்தரலிங்கம்<br>36 ஆவது ஒழுங்கை | 2 | 00 |
| திருமதி. செல்வராஜா<br>36 ஆவது ஒழுங்கை | 10 | 00 |
| திருமதி. அ. கைலைநாதன்<br>36 ஆவது ஒழுங்கை | 2 | 00 |
| திருமதி. இ. ஜெர்மையா<br>மனிங்பிளேஸ் | 1 | 00 |
| திருமதி. இ. சற்குணநாயகம்<br>55 ஆவது ஒழுங்கை | 1 | 00 |
| திருமதி. ப. இரத்தினசபாபதி<br>தயா வீதி | 1 | 00 |
| திருமதி. இ. இரத்தினம்<br>கல்யாணி வீதி | 1 | 00 |
| திருமதி. ம. நடராஜா<br>ஹரிசந்திரமாவத்த | 1 | 50 |
| திருமதி. ம. கனகசபை<br>ஹரிசந்திரமாவத்த | 1 | 00 |
| திருமதி. க. குமாரசாமி<br>ஹரிச்சந்திரமாவத்த | 2 | 00 |
| செல்வி. வி. செல்லப்பா<br>டப்பிள்யு. ஏ. சில்வாமாவத்த | 2 | 00 |
| திருமதி. ஹைமாவதி - சோமசேகரம்<br>பாயன்கடை ஒழுங்கை | 10 | 00 |
| திருமதி. வேலாயுதபிள்ளை<br>இராசவல்லி ஒழுங்கை | 2 | 00 |
| திருமதி. ம. சிவசம்பு<br>ஹரிசந்திரமாவத்த | 2 | 00 |
| திருமதி. த. கணேந்திரன்<br>டப்பிள்யு. ஏ. சில்வாமாவத்த | 2 | 00 |
| திருமதி. க. இராசலிங்கம்<br>மனிங்பிளேஸ் | 5 | 00 |
| திருமதி. ஜி. எஸ்.பொன்னையா<br>ஹம்டன் ஒழுங்கை | 1 | 00 |
| திருமதி. பொ. குலசிங்கம்<br>டப்பிள்யூ. ஏ. சில்வாமாவத்த | 1 | 00 |
| திருமதி. கே. விஸ்வரத்தினம்<br>கல்யாணி வீதி | 1 | 00 |
| திருமதி. வி. சுந்தரம்<br>சாளிமென்ற்வீதி | 10 | 00 |
| திருமதி. இ. சதாசிவம்<br>சாளிமென்ற் வீதி | 5 | 00 |
| திருமதி. சின்னத்தம்பி<br>சாளிமென்ற் வீதி | 11 | 00 |
| திருமதி. பி. நடராஜா<br>பெரேரா ஒழுங்கை | 5 | 00 |
| திருமதி. ஏ. எஸ் நடராஜா<br>சாளிமென்ற் வீதி | 15 | 00 |
| திருமதி. ச. தம்பிப்பிள்ளை<br>47 ஆவதுஒழுங்கை | 5 | 00 |
| செல்வன். சஞ்சீவன்-சிவலிங்கம்<br>விவேகானந்த அவென்யூ | 5 | 00 |
| திருமதி. த. சுந்தரலிங்கம்<br>36 ஆவது ஒழுங்கை | 5 | 00 |
| ஓர் அன்பர் | 10 | 00 |
| திருமதி. பவானந்தன்<br>36ஆவது ஒழுங்கை | 10 | 00 |
| ஆ. குணநாயகம்<br>புகையிரத நிலைய வீதி | 2 | 00 |
| திருமதி. ம. குமாரசாமி<br>மல்வத்த அவென்யூ<br>நுகேகொட | 10 | 00 |
| செல்வி. யசோதா-தனபாலசிங்கம்<br>திருக்குடும்ப மடம்<br>பம்பலட்டி | 5 | 00 |

# காந்திய தத்துவம் செயல்படுகிறது

காந்தீயம் வெறும் தத்துவம் மட்டுமல்ல என்றும் அதை நடைமுறையில் பின்பற்ற முடியும் என்றும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் சென்னை காந்தி மன்ற மாணவர்களிடையேபேசுகையில் கூறினர்

காந்திய தத்துவத்தை நடைமுறையில் பின்பற்றமுடியும் என்பதை, மத்தியப் பிரதேசக் கொள்ளைக்காரர்கள் சரணடைந்த நிகழ்ச்சி நிரூபிக்கிறது என்று ஜயப்பிரகாஷ் கூறினர்.

கொள்ளைக்காரர்கள் சரண் அடைவதை சில சுயநல சக்திகள் விரும்பவில்லை கொள்ளைக்காரர்களுக்கு இவர்கள் ஆயுதங்கள் சப்ளை செய்கின்றனர். கொள்ளையடிக்கும் பொருட்களை இவர்கள்மலிவானவிலைகளுக்குவாங்கிஇலாபகரமானவிலைக்கு விற்கின்ருர்கள். இவர்களைப் பற்றி அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று ஜயப்பிரகாஷ் கூறினர்.

PEOPLE'S ACTION
SARVA SEVA SANGA
NEWS LETTER
PUBLISHED ON THE FIRST
DAY OF EVERY MONTH
SARVA SEVA SANGH
RAJGHT : VARANASI 1
INDIA
IN CEYLON
Gandhi Nilayam
Uruthirapuram

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திரு. க. சிவகுருநாதன்<br>உடுத்துறை மகாவித்தியாலயம்<br>செம்பியன்பற்று | 5 | 00 |

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவாசங்கத்திற்காக உருத்திபுரம் சி.க. வேலரயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின்உதவியுடன் கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.